வெளியீடு எண் 78.

திருநாரையூர்த் திருப்பதிகங்கள்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண். 78

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

திருநாரையூர்த் திருப்பதிகங்கள்

இஃது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

ஆக்ஞைப்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1945

முதற்பதிப்பு
பிரதிகள் 500

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

முன்னுரை

கல்லா னிழன்மலை, வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர், நல்லார் புனைவரே.

திருநீறுங் கண்டிகையும் அஞ்செழுத்து மாகிய முப்பொருள்களையே சாதனமாகக் கொண்டு செயற்கரிய செயல்களைச்செய்து, அமண்முதலாம் பரசமயப் புறைநெறிகளின் வலிமையினை அழித்து, வைதிகமாம் நன்னெறியாகிய சைவச்செந்நெறியினை இற்றென விளக்கிய பரமாசாரிய சுவாமிகளால் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற திருப்பதிகங்கள் கொண்டதலங்கள் இருநூற்றெழுபத்துநாள் களுள் **திருநாரையூர்** என்பதும் ஒன்றாகும். முற்கலர் புதல்வரான புருசுண்டி முனிவரை அவமதித்த குற்றத்திற்காக, அவ்ரால் சாபம் பெற்ற நாராயண முனிவர் நாரை வடிவொடு பூசித்ததலமாதலின் இது இப்பெயர் பெற்றது.

விநாயகப் பெருமானும், சிவபெருமானும் முறையே எட்டெட்டுத் திருவிளையாடல்

களைச் செய்தது; சுந்தரமூர்த்தி சுவாமிக ளால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட திருத் தொண்டத் தொகையினைப் பின்பற்றிச் செய்த திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார்நம்பிகள் அவதரித்தது; அவ ருக்கு இளமைப்பருவத்தே வேதாகமங்களை உபதேசித்ததோடு உலகுய்யப் பாடிய திரு முறைகள் இருக்குந் தலத்தையும் அறிவுறுத் திய சுயம்புமூர்த்தியாகிய ஸ்ரீ பொல்லாப் பிள்ளையார் எழுந்தருளியிருப்பது; இது போன்ற இன்னும் பல சிறப்பியல்புகளையும் கொண்டு விளங்குவது இத்தலமேயாம். விநாயகர் நம்பியாண்டார் நம்பிகள் மூலம் திருமுறைகளை வெளிப்படுத்தியிராவிட்டால் இற்றைக்கு நமக்கெல்லாம் ஓதவும் உன்ன வும் உலப்பிலா மகிழ்வைத்தந்து, எண்ணிய வற்றை எண்ணியாங்கு எய்துவித்து, மொழி வளம், இசைவளம் முதலியனவும் நிரம்பியன வாய் ஒப்புயர்வற்று விளங்கும் திருமுறை களை நாம் எவ்வாறு பெறமுடியும். சம்பந்த சுவாமிகள் "செல்வத் திருநாரையூர்" என் றும், அப்பர் சுவாமிகள் "நாரையூர் நன்ன கர்" என்றும் சிறப்பித்துள்ளதும் இதுபற் றிப்போலும்.

தருமபுர ஆதீனத்தில் 24-வது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து, பல்லாற்றானும் சமயப்பணி செய்து, ஞானப்புகழ் பெற்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் இத்தல ஆலயத்தில் புதிதாகவே கோயிலமைத்து, அதில் தமது சந்தான பர்ம்பரையில் முற்றோன்றலாக அவதரித்தவர்களான ஸ்ரீ மெய்கண்டார் முதலிய புறச்சந்தான குரவர்கள் நால்வர்களது திருவடிவங்களையும் (ஏனைய சிவாலய அதிகாரிகளும் இவ்வாறு சந்தான குரவர்களைப் பிரதிட்டித்து வழிபட வேண்டும் என்பதற்கோர் எடுத்துக் காட்டாகப்) பிரதிட்டை செய்ததோடு, திருநாரையூர்த் தலவரலாறு என்னும் நூலினையும் அச்சிடுவித்து அன்பர்கட்கு வழங்கிய பேரருட்டிறம் இன்றும் என்றும் பாராட்டக்கூடிய தொன்றன்றே! அதுமாத்திரமா? அவைகளை நினைக்குந்தோறும் காணுந்தோறும் அவர்கள் திருவுருவத்தை அகக்கண்ணாற்கண்டு தரிசித்து வணங்குகின்றோமல்லவா?

இக்குருமூர்த்திகள், தமது பிற்றோன்றலாக எழுந்தருளியிருந்து சைவபரிபாலனஞ்

செய்தற்குரியார் இவரென அறிந்து 25-வது குருமகாசந்நிதானமாக எழுந்தருளச் செய்யப்பெற்ற **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** இத்தலத்துக்குரிய பதிகங்களையும் தனியே அச்சிட்டு சிறு நூலாக வெளியிட்டால் அன்பர்கள் பாராயணஞ் செய்தற்கு நலமாக இருக்குமென்று திருவுள்ளங்கொண்டார்கள். அத்திருவுள்ளக் குறிப்பின்படி இந்நூல் வெளிவந்துள்ளது. இது போலவே ஏனைய தலப்பதிகங்களும் வெளியிடப்படும். அன்பர்கள் பெற்றுப்பாராயணஞ் செய்து இறைவன் திருவருளைப் பெறுவார்களாக.

நம்பியாண்டார் நம்பிகள் சரித்திரச்சுருக்கம்.

திருநாரையூரில் ஆதிசைவர் குலத்திலே அவதாரஞ்செய்த நம்பியாண்டார் நம்பி என்பார் தந்தையார் ஊருக்குச் சென்றிருந்த காலத்தில் ஒருநாள் தாயார் கட்டளைப்படி நிவேதனத்தை எடுத்துக்கொண்டு பொல்லாப் பிள்ளையாரைப் பூசிக்கச் சென்றார். பெருமானுக்குத் திருமஞ்சனம் முதலியன செய்து நிவேதனத்தை அமுது செய்யவேண்டுமென்று இறைஞ்சி நின்றார். பெருமான் அமுது செய்யாதிருத்தலைக்கண்ட நம்பிகள் ஏதேனும் தவறு செய்துவிட்டேனோ என்று வருந்தித் தலையை மோதிக்கொள்ளப்புகுங்கால் பெருமான் "நம்பி! பொறு" எனத் தடுத்துத் திருவமுது கொண்டருளினார். மகிழ்ந்த நம்பியும் "எந்தையே! காலதாமதமாய்விட்டது பள்ளிக்கேகின் தேசிகனடிப்பான்; கலைகளை நீயே ஓதித்தரல் வேண்டும்" என, பெருமானும் அவ்வாறே அருளிச்செய்தனன். சிலநாள் கழிந்தது.

இவ்வற்புதமறிந்த ராஜராஜ அபயகுலசேகர சோழமன்னன் அளவிறந்த நிவேதனப்

பொருள்களை உடன் கொண்டு நாரையூர்வந்து நம்பியைப்பணிந்து "இதனைப்பிள்ளையாருக்கு நிவேதிக்க" என; நம்பியும் அப்பொருள்களை நிவேதனஞ் செய்தார். பிள்ளையாரும் அரசன் மகிழ அமுது கொண்டருளினர். பின்னர் மன்னன் வேண்டுகோட்படி நம்பி பெருமானை வணங்கி, "இன்றமிழ்சேர் மூவர் தமிழ் இருந்த வெல்லை, யெல்லையில்சீர்த் திருத்தொண்ட ரியல்பு மூர்த்தி!, நன்றுமருள் செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்து அவர் தெரிவிப்பத் தெரிந்து அரசனிடம் வந்து "சிதம்பரத்திலே கூத்தாடுந் தேவருக்குப் பின்னேயுள்ள அறையிலே மூவர்கையடையாளத்துடன் வைக்கப்பட்டிருக்கிறது. கண்டபெருமந்திரமே மூவர்பாடல்; கண்ணுதலோன் அருளிச்செய்தவேதங்கள் கைகாணு மந்திரங்கள்" என்று கூறித் திருமுறை ஆசிரியர்கள் பெருமையினையும் திருமுறைப் பெருமையினையும் விரித்துரைத்தார்.

மன்னனும் மகிழ்ந்து நம்பிகளுடன் தில்லைக்குச்சென்று; பெருமான் அருள் செய்தவாறே திருமுறைகளைக் கண்டான். அகமிக மகிழ்ந்தான். நம்பிகளும் மந்திரங்கள் எழுகோடி

ஆதலினால் மூவர் தேவாரங்களையும் ஏழுதிரு முறையாக வகுத்தார். அதற்குமேல் திரு வாசகம் திருக்கோவையார் இரண்டினையும் எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப்பா பல்லாண்டு இரண்டினையும் ஒன்பதாம் திரு முறையாகவும், திருமந்திரம் பத்தாந் திரு முறையாகவும், திருமுகப்பாசுர முதலியவை களைப் பதினோராந் திருமுறையாகவும் வகுத் தருளினார்.

இவர் இயற்றிய நூல்கள்.

☛ விநாயகர் திருவிரட்டை மணிமாலை, கோயிற்றிருப் பண்ணியர் விருத்தம், திருத் தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளை யார் திருவந்தாதி - திருச்சண்பை விருத்தம் - திருமும் மணிக்கோவை - திருவுலாமாலை - திருக்கலம்பகம், திருநாவுக்கரசர் திருவேகா தசமாலை.

சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள்

பண் - பியந்தைக்காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

உரையினில்வந்தபாவ முணர்நோய்களும்ம
செயறீங்குகுற்றமுலகில்
வரையினிலாமைசெய்த வவைதீரும்வண்ண
மிகவேத்திநித்தநினைமின்
வரைசிலையாகவன்று மதின்மூன்றெரித்து
வளர்கங்குனங்கைவெருவத்
திரையொலிநஞ்சமுண்ட சிவன்மேயசெல்வத்
திருநாரையூர்கைதொழவே. 1

ஊனடைகின்றகுற்ற முதலாகியுற்ற
பிணிநோயொருங்குமுயரும்
வானடைகின்றவெள்ளை மதிசூடுசென்னி
விதியானவேதவிகிர்தன்
கானிடையாடிபூதப் படையானியங்கு
விடையானிலங்குமுடிமேல்
தேனடைவண்டுபாடு சடையண்ணனன்று
திருநாரையூர்கைதொழவே. 2

ஊரிடைநின்றுவாழு முயிர்செற்றகாலன்
றுயருற்றதீங்குவிரவிப்
பாரிடைமெள்ளவந்து பழியுற்றவார்த்தை
யொழிவுற்றவண்ணமகலும்
போரிடையன்றுமூன்று மதிலெய்தஞான்று
புகழ்வானுளோர்கள்புணரும்
தேரிடைநின்றவெந்தை பெருமானிருந்த
திருநாரையூர்கைதொழவே. 3

தீயுறவாயவாக்கை யதுபற்றிவாழும்
வினைசெற்றவுற்றவுலகின்
தாயுறுதன்மையாய தலைவன்றனும
நிலையாகநின்றுமருவும்
பேயுறவாயகானி னடமாடிகோல
விடமுண்டகண்டன்முடிமேல்
தேய்பிறைவைத்துகந்த சிவன்மேயசெல்வத்
திருநாரையூர்கைதொழவே. 4

௩

வசையபராதமாய வுவரோதநீங்குந்
தவமாயதன்மைவரும்வான்
மிசையவராதியாய திருமார்பிலங்கு
விரிநூலர்விண்ணுநிலனும்
இசையவராசிசொல்ல விமையோர்களேத்தி
யமையாதகாதலொடுசேர்
திசையவர்போற்றநின்ற சிவன்மேயசெல்வத்
திருநாரையூர்கைதொழவே. 5

உறைவளரூனிலாய உயிர்நிற்கும்வண்ண
முணர்வாக்குமுண்மையுலகில்
குறைவுளவாகிநின்ற குறைதீர்க்குநெஞ்சி
னிறைவாற்றுநேசம்வளரும்
மறைவளர்நாவன்மாவி னுரிபோர்த்தமெய்ய
னரவார்த்த வண்ணல்கழலே
திறைவளர்தேவர்தொண்டி னருள்பேணநின்ற
திருநாரையூர்கைதொழவே. 6

தனம்வருநன்மையாகுந் தகுதிக்குழந்து
வருதிக்குழன்றவுடலின்
இனம்வளரைவர்செய்யும் வினையங்கள்செற்று
நினைவொன்றுசிந்தைபெருகும்
முனமொருகாலமூன்று புரம்வெந்துமங்கச்
சரமூன்றெரிந்தவவுணர்
சினமொருகாலழித்த சிவன்மேயசெல்வத்
திருநாரையூர்கைதொழவே. 7

உருவரைகின்றநாளி லுயிர்கொள்ளுங்கூற்ற
நணியஞ்சுமாத லுறநீர்
மருமலர்தூவியென்றும் வழிபாடுசெய்ம்மி
னழிபாடிலாதகடலின்
அருவரைசூழிலங்கை யரையன்றன்வீர
மழியத்தடக்கைமுடிகள்
திருவிரல்வைத்துகந்த சிவன்மேயசெல்வத்
திருநாரையூர்கைதொழவே. 8

௯

வேறுயர்வாழ்வுதன்மை வினைதுக்கமிக்க
பகைதீர்க்குமேயவுடலில்
தேறியசிந்தைவாய்மை தெளிவிக்கநின்ற
கரவைக்கரந்துதிகழும்
சேறுயர்பூவின்மேய பெருமானுமற்றைத்
திருமாலுநேடவெரியாய்ச்
சீறியசெம்மையாகுஞ் சிவன்மேயசெல்வத்
திருநாரையூர்கைதொழவே. 9

மிடைபடு துன்புமின்ப முளதாக்குமுள்ளம்
வெளியாக்கு முன்னியுணரும்
படையொருகையிலேந்திப் பலிகொள்ளும்வண்ண
மொலிபாடியாடி பெருமை
உடையினைவிட்டுளொரு முடல்போர்த்துளொரு
முரைமாயும்வண்ணமழியச்
செடிபடவைத்துகந்த சிவன்மேயசெல்வத்
திருநாரையூர்கைதொழவே. 10

௭

எரியொருவண்ணமாய வுருவானையெந்தை
பெருமானையுள்கிநினையார்
திரிபுரமன்றுசெற்ற சிவன்மேயசெல்வத்
திருநாரையூர்கைதொழுவான்
பொருபுனல்சூழ்ந்தகாழி மறைஞானபந்த
னுரைமாலை பத்துமொழிவார்
திருவளர்செம்மையாகி யருள்பேறுமிக்க
துளதென்பர்செம்மையினரே. 11

திருச்சிற்றம்பலம்

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

காம்பினை வென்றமென் றோளி பாகங்
கலந்தா னலந்தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடு விற்றிரு
நாரை யூர்மேய
பூம்புனல் சேர்புரி புன்ச டையான்
புலியின் னுரிதோன்மேல்
பாம்பினை வீக்கிய பண்ட ரங்கன்
பாதம் பணிவோமே. 1

தீவினை யாயின தீர்க்க நின்றான்
றிருநாரை யூர்மேயான்
பூவினை மேவு சடைமுடி யான்புடை
சூழப் பலபூதம்
ஆவினி லைந்துங்கொண் டாட்டு கந்தா
னடங்கார் மதின்மூன்றும்
ஏவினை யெய்த ழித்தான் கழலே
பரவா வெழுவோமே. 2

மாயவன் சேயவன் வெள்ளி யவன்வி
டஞ்சேரு மைமிடற்றன்
ஆயவ னாகியோ ரந்தர மும்மவ
னென்று வரையாகம்
தீயவ னீரவன் பூமி யவன்றிரு
நாரை யூர்தன்னில்
மேயவ னைத்தொழு வாரவர் மேல்வினை
யாயின வீடுமே. 3

∞

துஞ்சிரு ளாடுவர் தூமு றுவறு
ளங்குமு டம்பினராய்
அஞ்சுட ராரெரி யாடு வரார ழ
லார்வி ழிக்கண்
நஞ்சுமிழ் நாக மரைக்கசைப் பர்நல
ேனாங்கு நாரையூர்
எஞ்சிவ னார்க்கடி மைப்படு வார்க்கினி
யில்லை யேதமே. 4

பொங்கி ளங்கொன் றையினர் கடலில்
விடமுண் டிமையோர்கள்
தங்களை யாரிடர் தீர நின்ற
தலைவர் சடைமேலோர்
திங்களை வைத்தன லாடலி னார்திரு
நாரை யூர்மேய
வெங்கனல் வெண்ணீ றணிய வல்லா
ரவரே விழுமியரே. 5

௬

பாரு றுவாய் மையினர் பரவும்
பரமேட் டி பைங்கொன்றைத்
தாரு றுமார் புடையான் மலையின்
றலைவன் மலைமகளைச்
சீரு றுமா மறுகிற் சிறைவண்
டறையுந் திருநாரை
யூரு றையெம் மிறைவர்க் கிவையொன்
றொடொன் றொவ்வாவே. 6

கள்ளி யிடுதலை யேந்துகை யர்கரி
　　காடர் கண்ணுதலர்
வெள்ளிய கோவண வாடை தன்மேன்
　　மிளிரா டரவார்த்து
நள்ளிரு ணட்டம தாடுவர் நன்னல
　　ரோங்கு நாரையூர்
உள்ளிய போழ்தி லெம்மேல் வருவல்
　　வினையாயின வோடுமே. 7

நாமமெ னப்பல வும்முடை யானல
　　ரோங்கு நாரையூர்
தாமொம் மெனப்ப றையாழ் குழ்று
　　ளார்க ழல்பயில
ஈம விளக்கெரி சூழ்சு டலையி
　　யம்பு மிடுகாட்டில்
சாம முரைக்கநின் றாடு வானுந்
　　தழலாய சங்கரனே. 8

ஊனு டைவெண் டலைகொண் டுழல்வா
னொளிர்புன் சடைமேலோர்
வானி டைவெண் மதிவைத் துகந்தான்
வரிவண் டியாழ்முரலத்
தேனு டைமா மலரன்னம் வைகுந்
திருநாரை யூர்மேய
ஆனி டையைந் துகந்தா னடியே
பரவா வடைவோமே. 9

தூசுபுனை துவ ராடை மேவுந்
தொழிலா ருடம்பினிலுள்
மாசு புனைந்துடை நீத்தவர் கண்மய
னீர்மை கேளாதே
தேசுடை யீர்க டெளிந்த டைமின்
றிருநாரை யூர்தன்னில்
பூசு பொடித்த லைவ ரடியா
ரடியே பொருத்தமே. 10

தண்மதி தாழ் பொழில்சூழ் புகலித்
தமிழ்ஞான சம்பந்தன்
ஒண்மதிசேர் சடையா னுறையுந்
திருநாரை யூர்தன்மேல்
பண்மதியாற் சொன்ன பாடல்
பத்தும் பயின்றார் வினைபோகி
மண்மதியாது போய்வான் புகுவர்
வானோ ரெதிர்கொளவே. 11

திருச்சிற்றம்பலம்.

பண் - பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட
கடவுள் விடையேறி
உடலிடை யிற்பொடிப் பூசவல்லா
னுமையோ டொருபாகன்
அடலிடை யிற்சிலை தாங்கியெய்த
வம்மா னடியார்மேல்
நடலைவி னைத்தொகை தீர்த்துகந்தா
னிடநாரை யூர் தானே. 1

விண்ணின்மின் னேர்மதி துத்திநாகம்
விரிபூ மலர்க்கொன்றை
பெண்ணின்முன் னேமிக வைத்துகந்த
பெருமா னெரியாடி
நண்ணிய தன்னடி யார்களோடுந்
திருநாரை யூரானென்
றெண்ணுமி னும்வினை போகும்வண்ண
மிறைஞ்சு நிறைவாமே. 2

தோடொரு காதொரு காதுசேர்ந்த
குழையா னிழைதோன்றும்
பீடொரு கால்பிரி யாதுநின்ற
பிறையான் மறையோதி
நாடொரு காலமுஞ் சேரநின்ற
திருநாரை யூரானைப்
பாடுமி னீர்பழி போகும்வண்ணம்
பயிலு முயர்வாமே. 3

வெண்ணில வஞ்சடை சேரவைத்து
விளங்குந் தலையேந்திப்
பெண்ணி லமர்ந்தொரு கூறதாய
பெருமா னருளார்ந்த
அண்ணன் மன்னியுறை கோயிலாகு
மணிநாரை யூர்தன்னை
நண்ணல மர்ந்துறை வாக்குமின்க
ணடலை கரிசறுமே. 4

வானமர் தீவளி நீர்நிலனாய்
வழங்கும் பழியாகும்
ஊனம ரின்னுயிர் திங்குகுற்ற
முறைவாற் பிறிதின்றி
நானம ரும்பொரு ளாகிநின்றான்
றிருநாரை யூரெந்தை
கோனவ னைக்குரு கக்குறுகா
கொடுவல் வினைதானே. 5

கொக்கிற குங்குளிர் சென்னிமத்தங்
குலாய மலர்சூடி
அக்கர வோடரை யார்த்துகந்த
வழகன் குழகாக
நக்கம ருந்திரு மேனியாளன்
றிருநாரை யூர்மேவிப்
புக்கம ரும்மனத் தோர்கடம்மைப்
புணரும் புகறானே. 6

ஊழியு மின்பமுங் காலமாகி
யுயருந் தவமாகி
ஏழிசை யின்பொருள் வாழும்வாழ்க்கை
வினையின் புணர்ப்பாகி
நாழிகை யும்பல ஞாயிருகி
நளிர்நாரை யூர்தன்னில்
வாழியர் மேதகு மைந்தர்செய்யும்
வகையின் விளைவாமே. 7

கூசமிலா தரக்கன் வரையைக்
குலுங்க வெடுத்தான்றோள்
நாசம தாகி யிறவடர்த்த
விரலான் கரவாதார்
பேசவி யப்பொடு பேணநின்ற
பெரியோ னிடம்போலும்
தேசமு றப்புகழ் செம்மைபெற்ற
திருநாரை யூர்தானே. 8

பூமக னும்மவ னைப்பயந்த
புயலார் நிறத்தானும்
ஆமள வும்திரிந் தேத்திக்காண்ட
லறிதற் கரியானூர்
பாமரு வுங்குணத் தோர்களீண்டிப்
பலவும் பணிசெய்யும்
தேமரு வுந்திகழ் சோலைசூழ்ந்த
திருநாரை யூர்தானே. 9

வெற்றரை யாகிய வேடங்காட்டித்
திரிவார் துவராடை
உற்றரை யோர்க ளுரைக்குஞ்சொல்லை
யுணரா தெழுமின்கள்
குற்றமி லாததோர் கொள்கையெம்
மான்குழகன் றொழிலார்ரப்
பெற்றர வாட்டிவரும் பெருமான்
றிருநாரை யூர்சேர்வே. 10

பாடிய லுந்திரை சூழ்புகலித்
திருஞான சம்பந்தன்
சேடிய லும்புக ழோங்குசெம்மைத்
திருநாரை யூரான்மேல்
பாடிய தண்டமிழ் மாலைபத்தும்
பரவித் திரிந்தாக
வாடிய சிந்தையி னார்க்குநீங்கு
மவலக் கடருனே. 11

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள்

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

வீறு தானுடை வெற்பன் மடந்தையோர்
கூற னாகிலுங் கூன்பிறை சூடிலும்
நாறு பூம்பொழி னாரையூர் நம்பனுக்
காறு சூடலு மம்ம வழகிதே. 1

பள்ளி கொண்ட புலியுரி யாடையும்
வெள்ளி கொண்டவெண் பூதிமெய் யாடலும்
நள்ளி தெண்டிரை நாரையூ ரானஞ்சை
அள்ளி யுண்டலு மம்ம வழகிதே. 2

வேடு தங்கிய வேடமும் வெண்டலை
ஓடு தங்கிய வுண்பலி கொள்கையும்
நாடு தங்கிய நாரையூ ரானடம்
ஆடு பைங்கழ லம்ம வழகிதே. 3

கொக்கின் றூவலுங் கூவிளங் கண்ணியும்
மிக்க வெண்டலை மாலை விரிசடை
நக்க னாகிலு நாரையூர் நம்பனுக்
கக்கி னாரமு மம்ம வழகிதே. 4

வடிகொள் வெண்மழு மானமர் கைகளும்
பொடிகொள் செம்பவ ளம்புரை மேனியும்
நடிகொ ணன்மயில் சேர்திரு நாரையூர்
அடிக டம்வடி வம்ம வழகிதே. 5

சூல மல்கிய கையுஞ் சுடரொடு
பாலு நெய்தயி ராடிய பான்மையும்
ஞால மல்கிய நாரையூர் நம்பனுக்
கால நீழலு மம்ம வழகிதே. 6

பண்ணி னான்மறை பாடலோ டாடலும்
எண்ணி லார்புர மூன்றெரி செய்ததும்
நண்ணி னார்துயர் தீர்த்தலு நாரையூர்
அண்ண லார்செய்கை யம்ம வழகிதே. 7

என்பு பூண்டெரு தேறி யிளம்பிறை
மின்பு ரிந்த சடைமேல் விளங்கவே
நன்ப கற்பலி தேரினு நாரையூர்
அன்ப னுக்கது வம்ம வழகிதே. 8

முரலுங் கின்னர மொந்தை முழங்கவே
இரவி னின்றெரி யாட லுநீடுலாம்
நரலும் வாரிநன் னாரையூர் நம்பனுக்
கரவும் பூணுத லம்ம வழகிதே. 9

கடுக்கை யஞ்சடை யன்கயி லைம்மலை
எடுத்த வாளரக் கன்றலை யீரஞ்சும்
நடுக்கம் வந்திற நாரையூ ரான்விரல்
அடுத்த தன்மையு மம்ம வழகிதே. 10

திருச்சிற்றம்பலம்

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

சொல்லானைப் பொருளானைச் சுருதி யானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானை
அல்லானைப் பகலானை யரியான் றன்னை
யடியார்கட் கெளியானை யரண்மூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. 1

பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன் றன்னைப்
பாரொடுநீர் சுடர்படர்காற் றாயி னானை
மஞ்சுண்ட வானாகி வானந் தன்னின்
மதியாகி மதிசடைமேல் வைத்தான் றன்னை
நெஞ்சுண்டென் னினைவாகி நின்றான் றன்னை
நெடுங்கடலைக் கடைந்தவர்போய் நீங்க வோங்கும்
நஞ்சுண்டு தேவர்களுக் கமுதீந் தானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. 2

மூவாதி யாவர்க்கு மூத்தான் றன்னை
முடியாதே முதனடுவு முடிவா னானைத்
தேவாதி தேவர்கட்குந் தேவன் றன்னைத்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தான் றன்னை
ஆவாத வடலேறொன் றுடையான் றன்னை
யடியேற்கு நினைதோறு மண்ணிக் கின்ற
நாவானை நாவினினல் லுரையா னானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. 3

செம்பொன்னை நன்பவளந் திகழு முத்தைச்
செழுமணியைத் தொழுமவர்தஞ் சித்தத் தானை
வம்பவிழு மலர்க்கணைவே ளுலக்க நோக்கி
மகிழ்ந்தானை மதிற்கச்சி மன்னு கின்ற
கம்பனையெங் கயிலாய மலையான் றன்னைக்
கழுகினொடு காகுத்தன் கருதி யேத்தும்
நம்பனையெம் பெருமானை நாதன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. 4

புரையுடைய கரியுரிவைப் போர்வை யானைப்
புரிசடைமேற் புனலடைத்த புனிதன் றன்னை
விரையுடைய வெள்ளெருக்கங் கண்ணி யானை
வெண்ணீறு செம்மேனி விரவி னானை
வரையுடைய மகடவஞ்செய் மணாளன் றன்னை
வருபிணிநோய் பிரிவிக்கு மருந்து தன்னை
நரைவிடைநற் கொடியுடைய நாதன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. 5

பிறவாது மிறவாதும் பெருகி னானைப்
பேய்பாட நடமாடும் பித்தன் றன்னை
மறவாத மனத்தகத்து மன்னி னானை
மலையானைக் கடலானை வனத்து ளானை
உறவானைப் பகையானை யுயிரா னானை
யுள்ளானைப் புறத்தானை யோசை யானை
நறவாரும் பூங்கொன்றை சூடி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. 6

தக்கனது வேள்விகெடச் சாடி னானைத்
தலைகலனாப் பலியேற்ற தலைவன் றன்னைக்
கொக்கரைசச் சரிவீணைப் பாணி யானைக்
கோணாகம் பூணாகக் கொண்டான் றன்னை
அக்கினொடு மென்பணிந்த வழகன் றன்னை
யறுமுகனோ டானைமுகற் கப்பன் றன்னை
நக்கனைவக் கரையானை நள்ளாற் றானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே.

26

அரிபிரமர் தொழுதேத்து மத்தன் றன்னை
யந்தகனுக் கந்தகனை யளக்க லாகா
எரிபுரியு மிலிங்கபுரா ணத்து ளானை
யெண்ணாகிப் பண்ணா ரெழுத்தா னானைத்
திரிபுரஞ்செற் றொருமூவர்க் கருள்செய் தானைச்
சிலந்திக்கு மரசளித்த செல்வன் றன்னை
நரிவிரவு காட்டகத்தி லாட லானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. 8

ஆலால மிடற்றணியா வடக்கி னானை
யாலதன்கீ ழறநால்வர்க் கருள்செய் தானைப்
பாலாகித் தேனாகிப் பழமு மாகிப்
பைங்கரும்பா யங்கருந்துஞ் சுவையா னானை
மேலாய வேதியர்க்கு வேள்வி யாகி
வேள்வியினின் பயனாய விமலன் றன்னை
நாலாய மறைக்கிறைவ னாயி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. 9

மீளாத வாளென்னை யுடையான் றன்னை
வெளிசெய்த வழிபாடு மேவி னானை
மாளாமை மறையவனுக் குயிரும் வைத்து
வன்கூற்றி னுயிர்மாள வுதைத்தான் றன்னைத்
தோளாண்மை கருதிவரை யெடுத்த தூர்த்தன்
றோள்வலியுந் தாள்வலியுந் தொலைவித் தாங்கே
நாளோடு வாள்கொடுத்த நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே. 10

திருச்சிற்றம்பலம்